சுற்றறிக்கை இலக்கம் -PRE/2024/42

**TR - 07**

எனது இலக்கம் :- TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2024.08.18

**சகல தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்**
**பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோருக்கு,**

**<u>சனாதிபதித் தேர்தல்கள் - 2024.09.21</u>**
**<u>வாக்களிப்பு நிலையப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகத் தனியார் பஸ் வண்டிகளை ஈடுபடுத்திக்கொள்ளல்.</u>**

2024.09.21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையப் பணியாட் குழுவினர், எழுதுபொருட்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களைப் போக்குவரத்துச் செய்வதற்கு உங்களுக்குத் தேவையான பஸ் வண்டிகளைப் பெற்றுக் கொள்ளும் போது இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளுக்கு மேலதிகமாக தனியார் பஸ் வண்டிகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்க முடியும். உங்கள் மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தனியார் பஸ் வண்டிகளை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாயின் உங்களுக்குத் தேவையான பஸ் வண்டிகளின் எண்ணிக்கையைக் கணிப்பீடு செய்து **<u>இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட முகவரைத் தொடர்பு கொண்டு தேவையான எண்ணிக்கையிலான பஸ் வண்டிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவும்.</u>**

02. இந்த பஸ் வண்டிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளதோடு அக்கட்டணத் தொகைகளின் கீழ் வாக்களிப்பு முடிந்த பின்னர் நீங்கள் பெற்றுக்கொண்ட பஸ் வண்டிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்குத் தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவும்.

**மாவட்டத்தினுள் ஓட்டத்தின் போது ஒரு நாளைக்குரிய கொடுப்பனவு.**

| | 42 **ஆசனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட (ரூபா)** | **30 தொடக்கம் 40 வரையான ஆசனங்கள் (ரூபா)** | **25 தொடக்கம் 29 வரையான ஆசனங்கள் (ரூபா)** |
|---|---|---|---|
| 50 கி.மீ. வரை | 18,850.00 | 16,850.00 | 15,850.00 |
| 51 தொடக்கம் 75 கி.மீ. வரை | 20,850.00 | 18,850.00 | 17,850.00 |
| 76 தொடக்கம் 100 கி.மீ. வரை | 23,850.00 | 21,850.00 | 20,850.00 |
| 101 தொடக்கம் 125 கி.மீ. வரை | 26,850.00 | 24,850.00 | 23,850.00 |
| 125 கி.மீற்றருக்கு மேற்படும் போது 1 கி.மீற்றருக்கு | ரூபா. 250.00 | ரூபா. 200.00 | ரூபா. 200.00 |

03. மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக உணவுக்காக சாரதிகளுக்கு ஒரு நாளைக்கு 900/= ரூபா தொகையொன்றை செலுத்தல் வேண்டும். வாகன உதவியாளரொருவர் இருப்பின் அவருக்கும் ஒரு நாளைக்கு 900/= ரூபா தொகையை வழங்க முடியும். இந்த பஸ் வண்டிகளை வாக்களிப்பு நடைபெறும் தினத்துக்கு முந்திய தினம் (அதாவது 2024.09.20 ஆம் திகதி) காலை விநியோகித்தல் நிலையங்களுக்கு வரவழைத்துக் கொள்வது போதுமானதாகுமென்பதோடு அதற்கமைய இரண்டு தினங்களுக்கு இந்தக் கொடுப்பனவைச் செய்ய முடியும். **<u>சில பஸ் வண்டிகளுக்கு வாகன உதவியாளர் இல்லாத பட்சத்தில் குறித்த பஸ் வண்டிகளுக்கு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் அழைத்துச் செல்லும் அலுவலக உதவியாளரின்</u>**

உதவியை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

04. மேற்படி பெற்றுக் கொள்ளும் பஸ் வண்டிகளின் ஓட்டத் தன்மை பற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியமாயின், மாவட்ட மோட்டார் வாகனப் பரிசீலனையாளர்களிடம் வாகனத்தை ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

05. மேலும் வாக்குப் பெட்டிகள் விநியோகிக்கப்படும் தினம் தனியார் பஸ் வண்டிகள் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றபோது இந்த பஸ் வண்டிகளை ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு முன்னர் அவர்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய பிரயாண வழிகள் தொடர்பான பாதைகள் பற்றிய விபரக் குறிப்பொன்றை பஸ் வண்டிச் சாரதிகளுக்கு வழங்குவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவும்.

06. இந்த வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்யும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள உங்கள் மாவட்டத்திற்குரிய முகவரைத் தொடர்பு கொண்டு அவரது உதவியை உங்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். அவரது கையடக்க தொலைபேசி இலக்கத்தினூடாக அவரைத் தொடர்பு கொள்வதற்கு முடியாதுள்ள பட்சத்தில் சங்கத்தின் தலைவர் திரு. கெமுனு விஜேரத்ன அவர்களின் 077-7783255 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாக அவரைத் தொடர்பு கொள்ளவும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

**பிரதிகள் :-**
1. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு.
2. கணக்காய்வாளர் நாயகம்
3. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
4. தலைமை நிதி அலுவலர்
5. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

} தயவன்புடன் தகவலுக்காக

6. திரு.கெமுனு விஜேரத்ன,
தலைவர்,
இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்.

} தயவுசெய்து முன்கூட்டியே உங்கள் மாவட்ட இணைப்பு முகவரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கவும்.

**இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்.**
இல. 06,
நாவல வீதி,
நுகேகொடை.

தொலைபேசி : 011 - 2822459
தொலைநகல் : 011 – 2825947

**<u>இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் மாவட்ட பஸ் முகவர்கள்</u>**

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களை தொடர்புகொள்ளும்போது ஏதாவது பிரச்சினைகள் ஏற்படின் சங்கத்தின தலைமை அலுவலகத்திற்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கவும். **(0777783255 – திரு. கெமுனு விஜேரத்ன)**

| **தொடர் இலக்கம்** | **மாவட்டம்** | **பெயர்** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | திரு. கெமுனு விஜேரத்ன | 0777783255 |
| 2 | கம்பஹா | திரு. டீ. மில்டன் பெரேரா | 0777613774 |
| 3 | களுத்துறை | திரு. நிமல் ஜயலத் | 0716846195 |
| 4 | கேகாலை | திரு. ருவன் சமில | 0716372447 |
| 5 | இரத்தினபுரி | திரு. ஜே.எம். ஜயவீர | 0757274812 |
| 6 | மாத்தறை | திரு. ஏ. ரணவக்க | 0718116522 |
| 7 | காலி | திரு. கெமுனு விஜேரத்ன அவர்களை தொடர்புகொள்ளவும். | |
| 8 | அம்பாந்தோட்டை | திரு. டீ.எஸ்.எஸ். குணவர்தன | 0779003792 |
| 9 | அனுராதபுரம் | திரு. டீ. அஜந்த | 0716558658 |
| 10 | பொலன்னறுவை | திரு. ரொஷான் கால்லகே | 0778754108 |
| 11 | கண்டி | திரு. சரத் மஹானாம | 0757371064 |
| 12 | மாத்தளை | திரு. கெமுனு விஜேரத்ன அவர்களை தொடர்புகொள்ளவும். | |
| 13 | நுவரெலியா | திரு. பீ. சேனாரத்ன | 0778131903 |
| 14 | பதுளை | திரு. கெமுனு விஜேரத்ன அவர்களை தொடர்புகொள்ளவும். | |
| 15 | மொணராகலை | திரு. எச்.பி. சாகர | 0774962517 |
| 16 | திருகோணமலை | திரு. ஜீ.ஜீ. விமலசேன | 0662270028 |
| 17 | அம்பாறை | திரு. எச்.டீ. குணதாச | 0773037414 |
| 18 | மட்டக்களப்பு | திரு. எஸ்.டீ.எம்.எஸ்.ஏ. மௌலானா | 0773672159 |
| 19 | புத்தளம் | திரு. எம்.எஸ். மொஹமட் ராமு | 0767114579 |
| 20 | குருநாகல் | திரு. எம்.டீ.ஜே. சேனாதீர | 0777179631 |
| 21 | யாழ்ப்பாணம் | திரு. பீ. கங்காதரம் | 0778150050 |
| 22 | மன்னார் | | 0776036651 |
| 23 | வவுனியா | | 0772417033 |
| 24 | கிளிநொச்சி | | 0775584384 |
| 25 | முல்லைத்தீவு | | 0771133424 |